## இயல் 5

## தமிழர் பெருவிழா (கட்டுரை : பொங்கல் திருநாள் )

குறிப்புச்சட்டகம்:

- ✓ முன்னுரை
- ✓ பொங்கல் விழாவின் நோக்கம்
- ✓ கொண்டாடும் முறைகள்
- ✓ மாட்டுப்பொங்கல்
- ✓ முடிவுரை

முன்னுரை:

நம் தமிழ் நாட்டில் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவற்றுள் பொங்கல் விழா மிகவும் சிறந்ததாகும். பொங்கல் திருநாள் எவ்வாறு கொண்டாடப்படுகின்றது என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பொங்கல் விழாவின் நோக்கம்:

“ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் “ என்ற பெருமைக்கு ஏற்ப நாம் அனைவரும் உயிர் வாழ்வதற்குத் தேவையான சூரியனையும், உழவுக்குத் துணை புரியும் மாடுகளையும் சிறப்பிக்கவே நாம் பொங்கல் திருநாளைக் கொண்டாடுகிறோம்.

கொண்டாடும் முறைகள்:

மார்கழி மாதத்தின் கடைசிநாளில் அனைவரும் வீட்டிற்கு வெள்ளை அடித்து சுத்தம் செய்வர். தைமாதத்தின் முதல் நாளன்று அதிகாலையில் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து புதுப்பானையில் புத்தரிசியோடு வெல்லம், முந்திரி, நெய் சேர்த்துப் பொங்கல் வைப்பர். பொங்கல் பொங்கி வரும் போது பொங்கலோ பொங்கல் என்று மங்கல ஒலி எழுப்புவர். பின் பொங்கலோடு மஞ்சள், கரும்பும் சேர்த்து சூரியனுக்குப் படைப்பர். இவ்வாறு பொங்கல் விழாவைக் கொண்டாடுவர்.

மாட்டுப்பொங்கல்:

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல். அன்று காலையில் உழவின் முக்கியத் தோழனான மாடுகளைக் குளிப்பாட்டி, மாட்டின்

கொம்புகளுக்கு வண்ணம் பூசி, பொட்டிட்டு, மாட்டுக்கு பொங்கலைப் படைத்து வணங்குவர்.

## முடிவுரை:

உழைப்பின் உயர்வை உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழர்கள் தம் நன்றி உணர்வைத் தெரிவிப்பதே இப்பொங்கல் திருநாளின் நோக்கமாகும் என்பதை இக்கட்டுரையின் மூலமாக அறிந்துக் கொண்டோம்.